








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 11.02.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- நியமனங்கள்










## தமிழக நிகழ்வுகள்

- சென்னை மெட்ரோவின் நீள வழித்தடத்தில், டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான **10.01 கி.மீ தூரத்திற்கு மெட்ரோ இரயில் சேவையை** இந்தியப் பிரதமர் **நரேந்திர மோடி பிப்ரவரி 10** அன்று தொடங்கி வைத்தார்.
    - இதன் மூலம் சென்னை மெட்ரோ-வின் முதற்கட்ட மெட்ரோ இரயில் திட்டப் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- **ஜம்மு & காஷ்மீர்** மாநில அரசானது **லடாக்** பகுதியின் **நிர்வாக/வருவாய் பிரிவை**, மாநிலத்தின் **மூன்றாவது நிர்வாகப் பிரிவாக** அறிவித்துள்ளது.
    - ஜம்மு & காஷ்மீர் மாநில நிர்வாக அரசால் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஜம்மு & காஷ்மீரின் ஆளுநர் **"சத்தியபால் மாலிக்"** ஆவார்.
    - ஜம்மு & காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து பற்றி கூறும் அரசியலமைப்பு விதி – **370**
    - ஜம்மு & காஷ்மீருக்கான அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள் - **26 ஜனவரி 1957**

- **இந்திய தேர்தல் ஆணையமானது,** குடிமக்களுக்கு தங்கள் விவரங்களை சரிபார்க்கவும், விவரங்களை மாற்றவும், புதுப்பிப்பதற்காகவும் மற்றும் திருத்தங்களை மாற்றவும் **"வாக்காளர் சரிபார்ப்பு மற்றும் தகவல் திட்டம்"** ஒன்றை தொடங்கியுள்ளது.
    - இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இதற்கான உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. **வாக்காளர் உதவி எண் 1950ல்** அனைத்து குடிமக்களும் தகவல்களை பெறலாம்.

- எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் தங்களது அனுபவங்களை பரிமாறிக் கொள்வதற்கான, **PETRO TECH – மாநாட்டின் 13வது பதிப்பு உத்திரப் பிரதேச** மாநிலத்தின் **கிரெட்டர் நொய்டாவில்** நடைபெற்றது.

- விமான தயாரிப்பில் முன்னணியில் உள்ள **அமெரிக்காவின் போயிங்**

We Shine Academy™

**நிறுவனம்,** புதிதாக **நான்கு சினூக் ரக இராணுவ ஹெலிகாப்டர்களை இந்தியாவிற்கு வழங்கியுள்ளது.**
  - இந்த ஹெலிகாப்டர்கள், பேரிடர் காலங்களில் மீட்பு பணிகளுக்கும், போர்க் காலங்களில் அகதிகளை வெளியேற்றவும், நிவாரணப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

- **இந்தியா மற்றும் நார்வே** ஆகிய நாடுகளுக்கிடையே **நீலப்பொருளாதார வளர்ச்சியில் ஒத்துழைப்பை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு** மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
  - நீலப் பொருளாதார துறையில் சர்வதேச அளவில் முன்னணி நாடாக **நார்வே** உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு நீதி வழங்குவதற்கான நோக்கத்துடன் **அபுதாபி நீதிமன்றத்தில் மூன்றாவது அதிகாரப்பூர்வ மொழியாக ஹிந்தி** சேர்க்கப்பட்டுள்ளது.

- **ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின்** (UN's FAO) **பொது இயக்குநர்** பதவிக்கு NITI Aayog உறுப்பினர் **"ரமேஷ் சந்த்"** என்பவர் இந்திய அரசின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
  - ஐ.நா. உணவு மற்றும் வேளாண் கழகம் (UN FAO) **அக்டோபர் 16, 1945ல்** உருவாக்கப்பட்டது.
  - இதன் தலைமையகம் **இத்தாலியின் ரோம்** நகரில் உள்ளது.

## நியமனங்கள்

- **மார்ஷல் தீவு** குடியரசு நாட்டிற்கான இந்தியாவின் **புதிய தூதராக "சன்ஜய் குமார் வர்மா"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் தற்போது ஜப்பான் நாட்டிற்கான இந்திய தூதராக உள்ளார்.

We Shine Academy™